**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.150/2025**

**நாள் : 15.04.2026**
**ம.சா. 1 திருமதி.முருகம்மாள்**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்த விஜி (எ) விஜயகாந்த் எனது மகன் ஆவார். எனது மகனின் இறப்பிற்கான நஷ்டஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 83 T 8634 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று எதிரில் வந்த TN 23 AH 7133 என்ற இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகனுக்கு தலையில்தான் அதிகப்படியான காயம் ஏற்பட்டது. என் மகன் விபத்து சமயத்தில் ஹெல்மெட் அணிந்து சென்றார். என் மகன் ஹெல்மெட் அணிந்திருந்தால் தலைக்காயம் ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது திருப்பத்தூர்–கிருஷ்ணகிரி ரோட்டில் கண்ணன் மரப்பட்டறை அருகே நடந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனது மகனுக்கு எதிராக திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எனது மகன் இறந்துவிட்டதால் அந்த வழக்கு charge abate என்று முடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என் மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் எனது மகனுக்கு சொந்தமானதாகும். அதன் பதிவு சான்று எனது மகன் பெயரில்தான் உள்ளது. அந்த வாகனத்தின் பதிவு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் ஆமாம். ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் பெரியசாமியின் பெயரில் உள்ளது என்றும், எனது மகன்தான் இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டிச் சென்று எதிர் திசையில் வந்த மற்றொரு இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்

என்றால் சரியல்ல. எனது மகனுக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டான் என்றால் சரியல்ல. எனது மகனின் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்ட நிலையில் 2ஆம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனவே 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு திருமணமாகவில்லை. எனது மகன் மேஸ்திரி வேலை செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்ததை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கும் அதற்கு பின்னிட்டும் வேலூர் அரசு மருத்துவமனைக்கும் போனோம். அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதுதான் இறந்தார். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 பில்கள் வழக்கிற்காகவேண்டி தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விபத்தில் இறந்தவரை தவிர மற்றொரு மகன் இருக்கிறார். அந்த மகனும் மேஸ்திரி வேலை செய்து வருகிறார். நான் எனது மற்றொரு மகனின் பராமரிப்பில் இருக்கிறனே் என்றால சரியல்ல. நான் தனியாகத்தான் இருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது மகனின் இறப்பினால் எனக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 163Aன் கீழ் மனு தாக்கல் செய்துள்ள நிலையில் எனது மகன் ஓட்டிச் சென்ற வாகனமானது எனது மகனுக்கு சொந்தமானது இல்லை என்பதால் உரிமையாளர் என்ற முறையில் எவ்வித நஷ்டஈடும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.